**குவைத் பயணத்திற்கு முன்னதாக பிரதமரின் அறிக்கை**

டிசம்பர் 21, 2024

குவைத் மாநிலத்தின் அமீர் ஷேக் மெஷல் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல்-சபாஹ் அவர்களின் அழைப்பின் பேரில் இன்று நான் இரண்டு நாள் பயணமாக குவைத் செல்கிறேன்.

குவைத்துடன் பல தலைமுறைகளாகப் பேணி வரும் வரலாற்று ரீதியான உறவை நாங்கள் மதிக்கிறோம்.  நாங்கள் வலுவான வர்த்தகம் மற்றும் எரிசக்தித் துறை கூட்டாளர்கள் மட்டுமல்ல, மேற்கு ஆசிய பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் செழிப்பு ஆகியவற்றில் ஆர்வத்தை பகிர்ந்து கொள்கிறோம்.

குவைத் நாட்டின் இளவரசர் மற்றும் பிரதமர் அமீர் அவர்களை சந்திக்க ஆவலாக உள்ளேன்.  நமது மக்களுக்கும் பிராந்தியத்திற்கும் நன்மையளிக்கும் முன்னோக்கிய கூட்டாண்மைக்கான பாதை வரைபடத்தை உருவாக்க இது ஒரு வாய்ப்பாக இருக்கும்.

இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவை வலுப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய குவைத்தில் உள்ள புலம்பெயர்ந்த இந்தியர்களை சந்திக்க ஆவலுடன் காத்திருக்கிறேன்.

வளைகுடா பிராந்தியத்தின் முக்கிய விளையாட்டு நிகழ்வான அரேபிய வளைகுடா கோப்பையின் தொடக்க விழாவிற்கு என்னை அழைத்த குவைத் தலைமைக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.  தடகள சிறப்பையும் பிராந்திய ஒற்றுமையையும் கொண்டாடும் இந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த பயணம் இந்தியா மற்றும் குவைத் மக்களுக்கு இடையேயான சிறப்பு உறவுகளையும் நட்புறவையும் மேலும் வலுப்படுத்தும் என்று நான் நம்புகிறேன்.

**புது தில்லி**

**டிசம்பர் 21, 2024**